ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/25 - 2019 ඔක්තෝබර් මස 22 වැනි අඟහරුවාදා - 2019.10.22

*2146/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பீஎஸ்/சிஎஸ்ஏ/00/01/14/8*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

(1) கௌரவ ஜனக் டி சில்வா அவர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
(2) கௌரவ நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன அவர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
(3) கௌரவ நிஹால் சுனில் ராஜபக்ஷ அவர்கள், இளைப்பாறிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
(4) கௌரவ அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து அவர்கள், இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி
(5) திருமதி டபிள்யூ. எம். எம். ஆர். அதிகாரி, இளைப்பாறிய அமைச்சுச் செயலாளர்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய அதிகாரப்பத்திரத்தின் மூலம் 2019, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி கொழும்பு-கொச்சிக்கடை, நீர்கொழும்பு-கட்டுவாபிட்டி

1A - G 31323 — 392 (2019/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஆகிய கிறிஸ்தவ ஆலயங்களில், மட்டக்களப்பு சீயோன் கிறிஸ்தவ ஆலயம் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள பிரதான ஹோட்டல்கள் பலவற்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் காரணமாக அதிகூடிய எண்ணிக்கையானோருக்கு மரணம் விளைவிக்கக்கூடிய காயங்களை ஏற்படுத்தல், முழுமையான அங்கவீன நிலைமையை ஏற்படுத்தல், உயிரிழப்புக்கள் என்பவற்றைப் போன்று அதிகூடிய எண்ணிக்கையிலான சொத்துக்களை சேதப்படுத்தியமை தொடர்பாக புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணை செய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

இவ்விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளின் போது கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை உற்பத்திப் பெருக்கத்துடன் நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழுவிற்கு மேலதிக அதிகாரம் தேவையென ஆணைக்குழுவினால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 8(1), (அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவின் கீழ் குறித்துரைத்துக் காட்டப்பட்டுள்ள அதிகாரங்களும் இவ் ஆணைக்குழுவிற்கு மேலும் என்னால் ஒப்படைக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்களின் விவேகம், திறமை மற்றும் பக்கச்சார்பின்மை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு மேற்போந்த அதிகாரப்பத்திரத்தின் மூலம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் சொல்லப்பட்ட அதிகாரப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக தேவைப்படக்கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இத்தால் தங்களைப் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் கையளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

11-727

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.